# BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440
(Print ISSN: 2703-8785)



Bergen Tamilsk Avis - no.32 - December. 2023 - தேன் தமிழிதழ் - மாத இதழ் - இல.32 மார்கழி- 2023

## உறவுகளுக்கு வணக்கம்

2023ம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசை Jon Fosse என்ற நோர்வே எழுத்தாளர் ஸ்வீடன் மன்னர் Carl Gustaf இடமிருந்து கடந்த டிசம்பர் 10ம் நாளன்று பெற்றுக்கொண்டார்.
"சொல்ல முடியாதவற்றிற்கு குரல் கொடுக்கும் புதுமையான நாடகம் மற்றும் உரை-நடை" என்பதற்காக இந்த ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசை Jon Fosse பெற்றார் என்று நோபல் குழு தெரிவித்துள்ளது.


1928ம் ஆண்டில் Sigrid Undset என்ற நோர்வே நாட்டவர்இலக்கியத்துக்கான நோபல்பரிசை பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் தற்போழுது தான் நோர்வே நாட்டவர் அப்பரிசைப் பெற்றுள்ளார். Jon Fosse ஒரு கடினமான எழுத்தாளர் அல்ல, ஆனால் உலகளாவிய கருப்பொருள்களை வெளிப்படுத்த எளிய சொற்களைப் பயன்படுத்துபவர் என்று Stockholm இல் நடந்த விழாவில் Sweden பேராசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.

Jon Fosse நாவல்கள், கவிதைகள், சிறுவர் இலக்கியம், கட்டுரைகள் மற்றும் நாடகங்கள் பல எழுதியுள்ளார், மேலும் பல உன்னதமான படைப்புகளை மொழிபெயர்ப்பு செய்துள்ளார்.
நோர்வேயின் மிக முக்கியமான நாடக ஆசிரியர்களில் ஒருவராக திகழ்கின்றார். ஹென்றிக் இப்சனுக்குப் பின்னர் Jon Fosse அவர்கள் நோர்வேயில் சிறந்த நாடக ஆசிரியராகவே பார்க்கப்படுகிறார்.

அவர் எழுதிய புத்தகங்கள் மற்றும் நாடகங்களுக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார். இருப்பினும் இன்று இவர் பெற்றுள்ள இலக்கியத்துக்கான நோபல் விருது. உலகம் முழுதும் அவரை இலக்கியத்துறையில் உயர்த்தியுள்ளது.
Haugesund என்னுமிடத்தில் பிறந்த Jon Olav Fosse> பேர்கன் பல்கலைக்கழகத்தில் இலக்கியத்துறையில் உயர்கல்வியினை கற்று, பேர்கன் மண்ணிலேயே அதிக காலம் வாழ்ந்து வருகிறார். அவருக்கு பேர்கன் மாநகரசபை மகிழ்வோடு வாழ்த்து தெரிவித்துக் கொண்டது. அறத்தையும், வாழ் நிலைப்பண்புகளையும் 40 ஆண்டுகளுக்கு மேலாக இலக்கியப் படைப்பாக தந்துவரும் Jon Fosse அவர்களை தேன் தமிழிதழும் வாழ்த்தி நிற்கின்றது.

தேன் தமிழிதழ்
*Ansvarlig redaktør: Julius Antoni*
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி
தொலைபேசி எண்: (47) 924 63 674
BTA BERGEN TAMILSK AVIS

# பெருநாட்கால பெருந்தொற்று....







வருகின்ற வாரங்களில் influensa (Flu) நோயின் தாக்கம் அதிகரிக்கும் அத்துடன் குளிர்காலத்தில் கொரோனா அலை அதிகமாகும் என சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது, அத்துடன் தொற்று கட்டுப்பாட்டு ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு மக்களைக் கேட்டுக்கொள்கிறது.

குறிப்பாக தடுப்பூசி போடப்படாத வயதானவர்கள் மற்றும் ஆபத்துக் குழுக்களில் உள்ளவர்கள் influensa (Flu) மற்றும் கொரோனா தடுப்பூசி இரண்டையும் கூடிய விரைவில் எடுத்துக்கொள்வது இன்னும் முக்கியம் என்று பொது சுகாதார நிறுவனத்தின் துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

தற்காலத்தில் சமூகமயமாக்கல் மற்றும் influensa (Flu) தொற்றுநோய் முழு வீச்சில் நுழைவதால் தொற்று கட்டுப்பாட்டு ஆலோசனையையும் அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய நாட்களில் கிறிஸ்துமஸ் விருந்துகளில் கலந்து கொள்ளுவது, வீட்டிற்குள் நெருக்கமாக இருப்பது, மற்றும் உறவினர்கள் நண்பர்களை சந்திப்பது அதிகம் இருக்கலாம், அதே நேரத்தில், சுவாச நோய்த்தொற்றுகளின் விளைவாக தீவிரமாக நோய்வாய்ப்படும் நபர்களை கணக்கில் எடுத்துக்கொள்வதை நினைவில் கொள்வது அவசியம். இது குறிப்பாக கைக்குழந்தைகள், நீண்ட கால நோயில் வாடுபவர்கள் மற்றும் வயதானவர்களுக்குப் பொருந்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நீங்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், புதிய சுவாச நோய் அறிகுறிள் தென்பட்டால், வீட்டிலேயே இருக்க வேண்டும் என்பது பொதுவான ஆலோசனை ஆகும். ஆபத்துக் குழுக்களில் உள்ள ஒருவருடன் நீங்கள் இருக்கப் போகிறீர்கள் என்றால் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக அவர்கள் பரிந்துரைக்கப்பட்டபடி தடுப்பூசி போடப்படவில்லை என்றால். நீங்கள் இன்னும் மற்றவர்களுடன் இருக்கப் போகிறீர்கள் என்றால், உங்கள் தூரத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமும், முகமூடியை அணி-வதன் மூலமும், மற்றவர்களுடன் இருக்கும் நேரத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் நோய்த்தொற்றின் அபாயத்தைக் குறைக்கலாம்.

வைரஸ் தடுப்பு சிகிச்சையானது கடுமையான நோய்களின் அபாயத்தைக் குறைக்கும். தீவிர நோயின் ஆபத்தில் உள்ளவர்கள், தங்கள் மருத்துவருடன் தொடர்பு கொள்ளவும் என பரிந்துரைக்கப் படுகிறீர்கள்.

# “ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார்” (லூக்கா 2:11)




Fr. J. S. René Beshman OMI.
**ஆன்மிக குரு பேர்கன் நோர்வே**




தேன்தமிழிதழ் வாசகர்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் நல்லாசீர்கள் நிறைவாக தங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் தங்குவனவாக.

இற்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எரேமியா இறைவாக்கினர் “இராமாவிலே ஒரு குரல் கேட்கிறது, ஒரே புலம்பலும் அழுகையுமாய் இருக்கின்றது. இராகேல் தம் குழந்தைகளுக்காக அழுதுகொண்டிருக்கின்றார். ஆறுதல் பெற அவர் மறுக்கின்றார் ஏனெனில், அவருடைய குழந்தைகள் அவரோடு இல்லை” (எரேமியா 31:15) இறைவாக்குரைத்திருக்கின்றார்.

இவ்வாறே இயேசுக்கிறீஸ்து பிறந்த காலப்பகுதியிலும் மீண்டும் ஒரு மனிதப் பேரவலம் பாலஸ்தீனாவிலே அரங்கேறியது. இயேசுகிறிஸ்துவின் பிறப்பு தனது ஆட்சிக்கு ஆபத்தாக அமையுமோ எனக் கலங்கி ஏரோது மன்னன் இரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களைக் கொன்று குவித்தான் (மத்தேயு 2:16).
அன்று விவிலியம் சொன்ன பாலும் தேனும் பொழியும் கானான் தேசத்திலே இன்றும் இரத்தம் சிந்துதலும், கண்ணீரும் கம்பலையும் தொடர்கதையாகிப் போய்க்கொண்டிருக்கின்றது.

மனித மாண்பு அதிகாரத்தாலும், ஆணவத்தாலும், அடாவடித்தனத்தாலும் சூறையாடப்பட்டு பணபலத்திலும், ஆயுத மேலாண்மையிலும் சிக்கித்தவிக்கின்றது. மனித உயிர்கள், உணர்வுகள் துச்சமென பார்க்கப்படுகின்றது.
ஏன் இந்த கொடுமை? ஏன் இந்த பேரவலம்? யாரிடம் முறையிடுவது? யாரிடம் நீதி கேட்பது? இறைவன் மனிதனை தனது சாயலாகவும் பாவனையாகவும் அன்பின் மிகுதியினால் படைத்தார் என்று திருவிவிலியம் சொல்கின்றது. இருந்தும் மனிதனோ படைத்தவரை




வெறுத்து தீமையை நாடினான். ஒளியை விட இருளையும், வாழ்வைவிட சாவையும், உண்மையைவிட பொய்மையையும் விரும்பித்தேடி அலைந்தான். இறைகொடையை உதாசீனப்படுத்தி தன்மீது பழியையும் பாதகத்தையும் வருவித்துக் கொண்டான். அப்பொழுது கடவுள் தனது ஒரேபேறான மகனை உலகிற்கு மனிதனாக அனுப்பி அவரின் கொடூரமான சிலுவைச்சாவினால் மனிதனை மீட்டு தனது அன்பினை மீண்டுமொருமுறை நிருபித்தார். இதனை கிறிஸ்தவர்கள் ஆழமாக நம்புகின்றனர்.

அப்படியென்றால், இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும் இறைவன் மனிதனாய் பிறந்து எமக்கு பாவ விமோசனம் அருளினார் என்றால் இன்னும் ஏன் இந்த போர்கள்? அடிமைத்தனங்கள்? அதிகார போட்டிகள்? இன, மொழி, நிறம், சாதி, பாலின ஏற்றத்தாழ்வுகள்? காஸாவிலே எழும்பும் மனித மரண ஓலங்களை யார் கேட்பார்? அன்று முள்ளிவாய்காலிலே எம்மினத்துக்கு நடந்தேறிய அவலம் இன்றும் இயேசு பிறப்பெடுத்த மண்ணிலே அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. உலக அரசியல் வேடிக்கை பார்க்கின்றது. அவரவர் தமது நாட்டின் சுய இலாபத்தையும் தமது சுயநல சித்தாந்தத்தையும் தூக்கிப்பிடித்து சிலாகிக்கின்றனர். ஏதுமறியா பாலகர்களின் அழுகையையும், அபலைகளின் கூக்குரலையும் அதிகார வர்க்கம் சட்டை செய்வதாக தெரியவில்லை.

அன்று தாய்மண்ணிலே சில நூறு கிலோமீற்றர் தொலைவில் முள்ளிவாய்க்காலிலே இனவழிப்பு நடைபெற்றபோது கையறு நிலையில் இருந்த நாம் இப்பொழுது பல ஆயிரம் கிலோமீற்றர் தொலைவிலுள்ள பாலஸ்தீனாவில் இடம்பெறும் அவலத்திற்கு ஏதும் பெரிதாக செய்துவிட முடியாதுதான்.

ஆனால் இறைவனின் உடனிருப்பை உணரும் எவரும் அவ்வாறு இருக்க முடியாது. “இம்மானுவேல்” - கடவுள் எம்மோடு, இதுவே கிறிஸ்து பிறப்பின் உன்னத உணர்வு. இந்த ஊனும் உயிருமான இறையுணர்வு கொண்டோர் இறைவனின் இரக்கத்துக்காக இன்னும் அதிகமாய் வேண்டட்டும். எமது மௌனமான மனதுக்குள்ளே, குடும்ப உறவுகளுக்குள்ளே, சமூகத்துக்குள்ளே மீண்டுமொரு முள்ளிவாய்க்கால் அல்லது காஸா பேரவலம் இடம் பெறாது பார்த்துக்கொள்வோம். நெருங்கி வரும் இறைவனின் இரண்டாம் வருகைக்கு எம்மையெல்லாம் நம்பிக்கையோடு தயார் செய்யக் கிடைத்திருக்கின்ற இந்த அற்புத காலத்தில் எம்மை இன்னும் இன்னும் ஆழமாகத் தயார்ப்படுத்துவோம். உலக இரட்சகராம் இயேசுவின் மனித பிறப்பு எமக்கு இறைவனின் அளவு கடந்த அன்பினை உணர்த்திடட்டும்.

# இளையோரைக் காப்போம்

## கருத்துப்பகிர்வு



**இன்று ஈழத்தில் ஏராளமான இளையோர் போதைவஸ்து பாவனையில் மூழ்கி தமது வாழ்வை தொலைத்து வருகிறார்கள். இம்முக்கிய விடயம் தொடர்பாக உளவியலாளர் அருட்தந்தை I.S. விஜேந்திரன் அவர்களுடன் சந்திப்பு.**



- வணக்கம் அருட்தந்தை அவர்களே, உங்களைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தையும், எம் நாட்டு இளையோரின் போதை பொருள் பாவனை தொடர்பான உங்கள் கருத்தினையும் தாருங்ளேன்...

நான் 2010இல் குருவாக திருநிலைபடுத்தப் பட்டேன். அன்றிலிருந்து உள ஆற்றுப்படுத்தல், உளவியல் தொடர்பான பணிகளில் ஈடுபட்டு வருகின்றேன். 2010ஆம் ஆண்டில் பருத்தித்துறையில் ஆரம்பித்த எனது பணி பின்பு இந்தியா சென்று உள ஆற்றுப்படுத்தல், உளவள சிகிச்சை துறையில் முதுமானி பட்டத்தை பெற்று பின்னர் யாழ்ப்பாணத்தில் ஆறு வருடங்கள் பணியாற்றி விட்டு தற்போது கிளிநொச்சி கனகபுரத்தில் பணிபுரிந்து வருகின்றேன். 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி யுத்தத்துக்குப் பின்னர் அங்கு வாழும் இளையோர் மத்தியில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக எமது இளையோர் போதைவஸ்து பாவனைக்குள் மூழ்கி தமது வாழ்வை தொலைத்து வருகிறார்கள். இதற்கான அடிப்படை காரணம் என பல காரணங்களை சொல்லலாம். நமது நாட்டிலே போர் முடிந்ததன் பின்னர் பல கட்டுப்பாடுகளை இழந்து விட்டார்கள். இளையோர் தமது நண்பர்களோடு சேர்ந்து ஒரு தடவையாவது போதை பொருளை பாவித்துப் பார்ப்போம் என்று அதனை கையில் எடுக்கிறார்கள். சில பண முதலைகள் மாணவர்கள் மற்றும் இளையோரை தம் வசப்படுத்தி சீக்கிரத்தில் பணம் சம்பாதித்து விடலாமென ஆசை காட்டி அவர்களை இந்த போதை வஸ்துக்குள் மூழ்கடித்து விடுகிறார்கள். இளையோருக்கு வேலையில்லாத சூழ்நிலை இருப்பது, பெற்றோர் பிள்ளைகளை சரியான முறையில் கவனிக்காமல்




விடுவது, பெற்றோரின் மணமுறிவு, பெற்றோரின் பழக்க வழக்கங்களில் வரும் மாற்றங்கள், அத்துடன் யாழ் மண் மக்கள் விழிப்புணர்வு அற்றவர்களாகவும் இலக்கு அற்றவர்களாகவும் இருப்பதனால் இந்த போதையில் இறங்குபவர்கள் அதிலிருந்து மீள முடியாத நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இவ்வாறு பல வகையான காரணங்களை குறிப்பிடலாம்.

- *பிள்ளைகள் போதை பொருள் பாவனைக்குள் மூழ்கிய பின்னர் பெற்றோருக்கு உளவியல் தாக்கங்கள் எவ்வாறு இருக்கிறது?*

ஒரு குடும்பத்தில் இளையோரின் பங்கு பெரும் செல்வாக்கை செலுத்துகிறது. ஒருவன் போதைவஸ்தை பாவித்தால் முழு குடும்பமுமே பாதிக்கப்படுகிறது. குடும்பத்தில் பண சிக்கல்களும் ஏற்படுகிறது. ஒரு தடவை பாவிக்கும் அந்த போதைப் பொருட்களின் விலை 3000 ரூபாய்க்கு மேலாக இருக்கிறது. அதற்கான பணம் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்றால் அவர்கள் வன்முறைக்குள் செல்கிறார்கள். பெற்றோரை, சகோதரர்களை வற்புறுத்துகிறார்கள். அவர்களை காயப்படுத்துகிறார்கள், கத்தியால் குத்திய சம்பவங்களும் இருக்கிறது. இதனால் பெற்றோர் தங்கள் உயிரையும், பிள்ளையின் உயிரையும் பாதுகாக்க தாங்களாகவே பணம் கொடுக்கும் சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். இரண்டாவதாக பணம் இல்லை என்று சொன்னால், திருடுவதற்கும் மற்றவர்களின் உடமைகளை அபகரிப்பதற்கும் முற்படுகிறார்கள். சில பெற்றோர் தங்கள் உடமைகளை மகனுக்கு தெரியாமல் வேறு இடங்களில் வைத்து பாதுகாத்து வருகிறார்கள். அதிக பணம். அதிக நேரம். உறவுகளுக்குள் பிரிவு இவ்வாறு பல விடயங்களை சொல்லலாம். இங்கு குடும்ப வன்முறை என்று பார்க்கும் போது அமைதி இல்லாமை, சந்தோசம் இல்லாமல், என்றும் குழப்பமும், எனது பிள்ளை எப்படி இருப்பான் என்ற பயமும் சூழுகிறது. இவர்களை எப்படி வெளியே கொண்டு வருவது என்ற கவலையை தான் அவர்களுக்கு பெரும் குழப்பத்தை கொடுக்கிறது.

- *ஒரு ஆன்மீக குருவாகவிருந்து போதை பாவனையால் ஏற்படுகின்ற குடும்ப வன்முறைகளை எப்படி பார்க்கிறீர்கள்?*

நான் உளவியல் ரீதியாக ஆற்றுப்படுத்தலில் எனது கவனத்தை அதிகம் செலுத்துவதனாலே கிளிநொச்சி வைத்தியசாலைக்கு உளவியல் ஆற்றுப்படுத்தலுக்கு சென்று வருகிறேன். அத்துடன் எனது நிலையத்துக்கும் பல வகையான நபர்கள் ஆற்றுப்படுத்தலுக்கு வருகிறார்கள். வைத்தியசாலையில் பார்க்கின்ற அதிகமான சம்பவங்கள் வன்முறை சம்பந்தமாகவே இருக்கிறது. ஒரு கணவன் போதைப்பொருள் பாவிப்பதால் தன் மனைவியையும் பிள்ளைகளையும் துன்பப்படுத்துகிறார். அதனால் தற்கொலை முயற்சிகளுக்கும் செல்கிறார்கள். போதைப் பொருட்களை பாவிப்பவர்கள் மூளையில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன, அதேபோல அதனை பாவிக்காமல் விடும் போது அவர்களது மூளையிலே அதிகமான தாக்கங்கள் அமுக்கங்கள் ஏற்பட்டு அவர்கள் வன்முறைக்குள் தள்ளப்படுகிறார்கள். இது குடும்ப வன்முறையையும் தாண்டி சமூக வன்முறையாகவும் வெடிக்கிறது. தமது நண்பர்களையும் வன்முறைக்குள் தூண்டுவார்கள்.

- போதை பொருட்களில் இருந்தும் வன்முறைகளில் இருந்தும் அவர்களை தடுப்பதற்கு எவ்வாறான விழிப்புணர்வு கொடுக்கப்படுகிறது?

வீதி நாடகங்கள் தெருக்கூத்துக்கள் செய்வதன் ஊடாக விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். போதையில் பாதிக்கப்பட்டவர்களை சரியாக நிவர்த்தி செய்து பாதுகாப்பதற்கு எமது சமூகத்தில் பயிற்றப்பட்ட நிபுணர்கள் மிகவும் குறைவாக இருக்கிறது. போதை பொருட்களை விநியோகிப்பது ஒரு network ஆக நடைபெற்று வருகிறது. அந்த விநியோகஸ்தர்களை தடுக்கவில்லை என்றால் பாவிப்பவர்களை தடுக்க முடியாது என்பது எனது தனிப்பட்ட கருத்து. ஏற்கனவே பாவனையில் இருப்பவர்களுக்கு விழிப்புணர்வை கொடுப்பது கடினம், நமது இடங்களில் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை சீர்படுத்த சில புனர்வாழ்வு நிலையங்கள் இருக்கின்றன. அவர்களை ஊக்கப்படுத்தி அவ்வாறான நிலையங்களுக்கு அனுப்பி வருகின்றோம். விழிப்புணர்வுக்கு அப்பால் இவற்றை விநியோகிப்பவர்களை எவ்வாறு தடுப்பது என்பதை தான் நாம் கவனத்தில் கொள்ள வேண்டி உள்ளது. அவர்களை தடுக்கின்றபோது பல பாதிப்புகளும், வன்முறை சம்பவங்களும் ஏற்பட்டிருக்கிறன.

- புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் நமது தாயக உறவுகளுக்கு பல வழிகளிலும் உதவி-களை புரிந்து வருகிறார்கள். இந்த போதைப்பொருள் பாவனை விடயத்தில் புலம்பெயர்வாழ் மக்கள் எவ்வாறான உதவிகளை புரியலாம் நினைக்கிறீர்கள்?

பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு கொடுக்க எமக்கு நிபுணர்கள் தேவை. அதற்கான கல்வி அறிவை கொடுக்க வேண்டும். இத்துறையிலே ஆர்வம் உள்ளவர்களை இந்தியாவுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு அனுப்பி இதற்கான பயிற்சி கொடுப்பதனால், அவர்களோடு சில விதிமுறைகளை கைச்சாத்திட்டு உதவி செய்யலாம். அதாவது இரண்டு வருட கல்வியை கொடுத்து, அவர்கள் பத்து வருடங்களாவது எம்மோடு இந்த பணியை செய்ய வேண்டும். இவ்வாறான உடன்படிக்கையை செய்து கொண்டால் அவர்களை கவுன்சிலிங் ஆற்றுப்படுத்தலுக்கு அனுப்பி எடுக்கலாம். இதற்கு ஓரளவு நிதி தேவையாக இருக்கும் அதனைப் பற்றி புலம்பெயர் வாழ் மக்கள் சிந்திக்கலாம். புனர்வாழ்வு நிலையங்களுக்கும் நிதி பற்றாக்குறை இருக்கிறது. பாதிக்கப்பட்ட அனேகரை உள்வாங்க முடியாமல் இருக்கிறது. எனவே அவ்வாறான உதவியை புரிந்து கண்காணிக்கலாம்.

# Energy drink- உற்சாகபானம்



ஏராளமான இளையோர் உற்சாக பானங்கள் அருந்துகின்றனர். 2017- 2023 காலகட்டத்தில், குறிப்பாக 2019 முதல் உற்சாக பானங்களை அருந்தும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது மிகவும் கவலை அளிப்பதாக நோர்வே சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.ஏனெனில் உற்சாக பானங்களில் நிறைய கா.ஃ.பின் உள்ளது, இது தூக்கமின்மை மற்றும் மோசமான தூக்கத்தின் அபாயத்தை அதிகரிக்கிறது. பிற எதிர்மறை சுகாதார விளைவுகளை ஏற்படுத்துகிறது.

நோர்வே சுகாதார அமைச்சின் அறிக்கையின்படி உற்சாக பானங்கள் 13வயதிலிருந்தே பொதுவானதாகிவிட்டன என்பதைக் காட்டுகிறது. 10ம் வகுப்புக்கு உட்பட்ட பாடசாலைகளில் 58மூ மற்றும் மேல்நிலைப் பாடசாலைகளில் 72% உற்சாக பானங்களை அருந்துகிறார்கள். கா.ஃ.பின் தூக்கக் கலக்கம், மத்திய நரம்பு மண்டலம் மற்றும் இருதய அமைப்பில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று பொது சுகாதார நிறுவனத்தின் ஆராய்ச்சியாளரும் அறிக்கையின் பகுப்பாய்வுகளுக்குப் பொறுப்பானவருமான மரியன்னே ஹோப் ஆபெல் தெரிவித்துள்ளார்.

10-18 வயது பிரிவில் உற்சாக பானங்களின் பயன்பாடு கா.ஃ.பின் என்பது ஒரு மைய தூண்டுதல் மற்றும் போதைப்பொருளாகும், இது இளைஞர்கள் பெரியவர்களை விட குழந்தைகளை பாதிக்கிறது, முக்கியமாக அவர்களின் குறைந்த உடல் எடை காரணமாகும். 53கிலோவுக்கும் குறைவான எடையுள்ள இளைஞர்களுக்கு பொதுவான எதிர்மறையான உடல்நல விளைவுகளை ஏற்படுத்தும்.

உற்சாக பானங்களின் விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருகிறது இது நல்ல சுவையாக இருக்கிறது என்று முக்கிய காரணம் சொல்லப்படுகிறது. தாகம் தீர்க்கவும் எனர்ஜி பானங்களை குடித்ததாக இளைஞர்கள் பதிலளித்தனர். குறிப்பாக வயதான இளைஞர்கள்
மத்தியில், அதிக ஆற்றலைப் பெறுவதற்கும், அதிக விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் கூறியவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் மதுவுடன் உற்சாக பானங்களை கலந்து கொடுத்ததாகவும் பலர் கூறியுள்ளனர்.

# திருமறைக் கலாமன்ற தினம்



திருமறைக் கலாமன்ற தினம் டிசம்பர் மூன்றாம் நாளன்று நோர்வே பேர்கன் நகரில் Vannkanten கலாசார மண்டபத்தில் பேர்கன் சித்தி விநாயகர் ஆலயக்குருக்கள் பிரம்மஸ்ரீ ஆனந்தராஜ குருக்களின் ஆசீருடனும், மேலும் பல முக்கிய சிறப்பு விருந்தினர்களின் மங்கல விளக்கேற்றலுடனும், மன்ற கீதத்துடனும் ஆரம்பமாகியது.

நிகழ்வினை றொபேட் அலெக்ஸாண்டர் அவர்கள் தொகுத்து வழங்கினார். இயக்குனர் மற்றும் மறைந்த கலைஞர்களுக்கான அஞ்சலி நிகழ்வு, துணை இயக்குனர் அருட்தந்தை ஸ்ரீபன் அன்ரன் அடிகளாரின் வாழ்த்துரை மற்றும் மன்ற செயல்பாடுகள் காண்பிக்கப்பட்டன. தொடர்ந்து செயல்படுத்த வேண்டிய கலைநிகழ்வுகள் பற்றிய கருத்துக்களை மக்கள் பரிமாறிக்கொண்டனர்.


இனம், மதம், மொழியை கடந்து செயல்படும் மன்றமானது, தமிழர்களின் பாரம்பரிய கலைகளை அழிய விடாது பேணிப் பாதுகாத்து வருகிறது. திருமறைக் கலாமன்றம் தாய்நாட்டில் பல பாகங்களிலும் இயங்கி வருவதோடு, தமிழர் புலம்பெயர்ந்து வாழும் பல நாடுகளிலும் தனது கிளைகளைப் பரப்பியுள்ளது. அந்த வகையில் நோர்வே திருமறைக் கலா மன்றம் 1999ல் இயக்குனர் நீமரிய சேவியர் அடிகள் ஆரம்பித்து வைத்தார். 2000ஆம் ஆண்டில் “பலிக்களம்” என்ற கலை படைப்பு Grieghallen மண்டபத்தில் அரங்கேறியது. 2004ல் காவிய நாயகன் கலைச்சித்திரம் அதே மண்டபத்தில் அரங்கேறியது. இரண்டிலும் 70 கலைஞர்களுக்கு மேல் அரங்கில் தோன்றினர்.

2005இல் Bergen Dance Teater மண்டபத்தில் அமரர் ஸ்டீபன் அலெக்சாண்டர் அவர்களது நெறியாள்கையில் “கண்டி அரசன்” நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது. 2015ம் ஆண்டு பேர்கனில் இயங்கிய கலைக்கூடங்களை இணைத்து “கலை மாலை” நிகழ்ச்சி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அத்துடன் 2016ஆம் ஆண்டில் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குனர் ஜோன்சன் ராஜ்குமார் அவர்கள் நோர்வே வருகைதந்து 10 நாட்கள் தங்கி அரங்க பயிற்சிகள் மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கினார். கொரோனா தொற்று காலப்பகுதியில் நோர்வே மன்றம் தாய் நாட்டிலும், கனடா மண்ணிலும் நடைபெற்ற டிஜிட்டல் கலை நிகழ்வுகளுக்கு நோர்வே மன்றத்து நிகழ்வுகளும் தயாரித்து அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தாய் மன்றத்துடனும், கனடா, பிரான்ஸ், சுவிஸ் மற்றும் ஏனைய கிளைகளுடனும் தொடர்பிலிருந்து உறவைப் பேணி வருகின்றது. தாய் மன்றத்தின் உன்னதமான செயற்பாடுகளுக்கு எம்மாலியன்று நிதி உதவிகளைப் புரிந்து வருகின்றது. நோர்வே திருமறைக்கலா மன்றமானது நோர்வே நாட்டில் சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

# பெத்லஹேம்!

— சிராஜ் மஷ்ஹூர்.




இயேசு பிறந்த இன்றைய நாளில்
பெத்லஹேமின் தெருக்கள்
களையிழந்து கிடக்கின்றன.
இந்தத் தொல் நகரம்
ஆழ்துயரில் ஊறியிருக்கிறது.
பாலன் இயேசுவைத் தேடும்
அவர்களது கண்கள்
காஸாவில் நிலைகுத்தி நிற்கின்றன.

"இம்முறை கொண்டாட்டங்கள் இல்லை"
என்ற அறிவிப்பு வந்தாயிற்று.
நள்ளிரவு ஆராதனையில்
மெழுகுதிரிகளின்
மெல்லிய வெளிச்சம்
ஊசல் போல
அங்குமிங்குமாய் அலைகிறது.

மரணத்தின் மடியில்
துடிக்கும் குழந்தைகளை
மனிதத்தின் மென்கரங்கள்
வாரி அணைக்கின்றன.

பாதிரியார் சொல்கிறார்:
"தார்மீகத்தின் திசைகாட்டி
இப்போது காஸாவில் இருக்கிறது."
மனம் ஒரு கணம் அதிர்கிறது.

பெத்லஹேம்
தீராத் தோழமையின் குரல்!
ஒருமைப்பாட்டின் ஆழ்மொழி!!

பெத்லஹேமில் அசைந்த காற்று
ஜெரூசலேம் வழியாக வந்து
எங்கள் வீட்டு மாமரக் கிளையைத்
தழுவுகிறது.
பட்டாம்பூச்சி விளைவு* போல
பாரெங்கும் அது
சிறகசைத்துப் பறந்து செல்கிறது.

இதோ இந்தக் கணத்தில்
என் நெஞ்சைத் தழுவுவதும்
அந்தக் காற்றுதான்.
இப்போது நானிருப்பது
பெத்லஹேமின் தெருக்களில்.

*பட்டாம்பூச்சி விளைவு (Butterfly Effect):
சுருக்கமாய்ச் சொன்னால்,
நுண்ணிய தொடக்கநிலை அசைவுகள்,
நீண்டகாலத்தில் பெரிய மாற்றங்களை
உண்டுபண்ணும் என்ற கருத்து.
"பெத்லஹேம் (Bethlehem)"
இயேசு பிறந்த இடம். பலஸ்தீனின்
மேற்குக் கரையில் உள்ளது. வருடா
வருடம் கிறிஸ்மஸ் தினத்தன்று இங்கு
பெரும் கொண்டாட்டம் நடக்கும்.
உலகெங்குமிருந்து கிறிஸ்தவர்கள்
இங்கு வருவது வழக்கம். இம்முறை
கொண்டாட்டங்களை ரத்து செய்து
விட்டார்கள்.



# ஆமை புகுந்த நத்தால்

– தமயந்தி.

கரையோரக் கிராமங்களில் ஞாயிற்றுக் கிழமைகளில் தொழிலுக்கு கடலில் இறங்கக்கூடாது என்பது எழுதி:.எழுதாத கத்தோலிக்க திருச்சபைச் சட்டம். அல்லது ஓய்வுநாள் என்பதற்காக மக்கள் தங்களுக்குத் தாங்களே சுயமாக வரித்துக்கொண்ட விதி.

அன்று டிசம்பர் 23. ஞாயிற்றுக்கிழமை, 1979ஆம் ஆண்டு. கிராமத்தில் யாருமே கடலுக்கு மீன் பிடிக்கப் போயிருக்கவில்லை.
மறுநாள் 24ஆம் திகதி இரவு 12மணிக்கு நத்தார் சாமப்பூசை. சாமப்பூசை முடிந்த கை-யோடு ஆலயத்திலிருந்து நேராக அம்மாவும் அப்பரும் என்னையும் தங்கையையும் அழைத்துக்கொண்டு தமது பாரம்பரிய, பரம்பரை மூத்தார்களைச் சந்தித்து ஆசி வாங்குவதற்காக சில வீடுகளுக்கு அழைத்துச் செல்வார்கள். அதன் பின்புதான் வீட்டுக்கு வந்து பலகாரம், சவ்வரிசியும் ராசவெள்ளிக்கிழங்கும் கலந்து செய்த களி போன்றவைகளைச் சாப்பிடுவோம்.

மூன்று மணியாகி விட்டது. இன்னும் சற்று நேரத்தில் விடிந்துவிடும். எனக்கென்றால் ஒரே அவதியாகவும், அங்கலாய்ப்பாகவும் இருந்தது. மேற்படி சந்திப்புக்கள், ஆசிகள், பலகாரச் சடங்குகளெல்லாம் எப்போதான் முடியும் என்றிருந்தது. ஏனென்றால் வருடத்தில் ஒரேயொரு நாள்தான் எங்களது களங்கண்டிப் பட்டி எனக்காகத் தரப்படும். அது எனது நத்தார்ச் செலவுகளுக்காக. இந்த நத்தாருக்கு எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஏனென்றால் நேற்று ஞாயிற்றுக் கிழமையாதலால் களங்கண்டிப் பட்டி இழுக்கவில்லை. இரண்டு நாட்களுக்குமான உழைப்பு எனக்காக பட்டியில் காத்திருக்கும். விடிவதற்குள் அவற்றைக் கைப்பற்றியாக வேண்டும். கொஞ்சம் தாமதித்தால் பெரிய மாமர் அல்லது சித்தப்பர் எமது பட்டியை இழுத்து உழைப்பை முழுவதும் தாம் எடுத்து விடுவார்கள். அப்பரும் அவர்களிடம் எந்தக் கேள்வியும் கேட்கமாட்டார். இழப்போ எனக்குத்தான். ஒரே அந்தரமாக இருந்தது.

ஒருவாறாக எல்லாச் சம்பிரதாயங்களையும் முடித்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாகக் கடற்கரைக்குப் போனால்..... அங்கே எமது தோணியைக் காணவில்லை. யாரோ தோணி இல்லாதவர்கள் தொழிலுக்குக் கொண்டுபோய் விட்டார்கள். கூக்குரலெடுத்து சமிக்ஞை இட்டபடி கரை முழுவதும் அங்குமிங்குமாக ஓடித் திரிகிறேன். பதில்க்குரல் எங்கிருந்தும் வரவில்லை. விடிவெள்ளியும் கிழக்கில் எழுந்து கொண்டிருந்தது. அன்றென்னவோ விடிவெள்ளி மிகமிக வேகமாக மேலெழுந்து வருவது போலிருந்தது. விடிவெள்ளிமீது கோபம் கோபமாக வந்தது. பல்லில் படாதபடி விழுங்க வேண்டும் என்று சுவாமி தரும் ஒஸ்த்தி அப்பத்தை இரகசியமாகச் சப்புவதுபோல் இந்த விடிவெள்ளியையும் பிடுங்கிச் சப்ப வேண்டும்போல் ஆவேசமாக இருந்தது.

கண்களுக்கெட்டிய தொலைவில் மெல்ல மெல்ல ஒரு தோணி கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. அடையாளம் கண்டுகொண்டேன். அது எங்களது சிறகுகட்டித் தோணிதான். தோணி கரையில் வந்து அணியத்து ஏரா தட்டி நின்றது. ஞானரெத்தினம் குஞ்சப்பு கடையாலில் மரக்கோலோடு நின்று என்னைப் பார்த்து பரிதாபமாகச் சிரித்ததை விடிவெள்ளி வெளிச்சத்தில் கண்டேன்.

ஞானரெத்தினம் குஞ்சப்பு அவரது இளந்தாரிக் காலத்தில் மிகப்பெரும் தொழிலாளியாக இருந்தவர். கிராமத்துக்குள் முதன்முதல் ட்ரான்ஸ்ஸிஸ்டர் றேடியோ வைத்திருந்தது அவர்தான். எந்தவித ஊதாரித்தனமும் இல்லாத குஞ்சப்பு எல்லாம் இழந்து, எதுவுமற்ற வெறும் மனிதனாகப் போனது அவரது நண்பர்களுக்காக என்று கிராமத்தார் சொல்வார்கள். கல்யாணமே செய்யாமல் இருந்த அவரிடம் இருந்ததெல்லாம் 3ரூபாய்க்கு வாங்கிய தூண்டில் கட்டை ஒன்றுதான். இப்படி தொழில் முடித்து வந்த தோணிகளில் ஒன்றைக் கொண்டு செல்வார், 3, 4 ரூபாய்க்கு மீன் பிடிப்பார், அது அன்றைய நாள் அவருக்குப் போதுமானதாக இருக்கும்.

ஞானரெத்தினம் கொஞ்சப்பு தூண்டில் தொழில் முடித்துக் கொண்டுவந்த எமது தோணிக்குள் பட்டி ஒதுக்குவதற்கான நாம் வைத்திருந்த எமது கடிப்பு வலை இருக்கவில்லை. அதனையும் யாரோ எடுத்துச் சென்று விட்டார்கள். எனக்கோ இன்னும் தலை கிறுகிறுக்கத் தொடங்கி விட்டது. பெரியமாமரும், சித்தப்பரும் பட்டியை வழித்துத் துடைப்பதற்குமுன் போனால்தான் எனது இந்த நத்தார் சிறக்கும். இல்லையென்றால் ஸ்ரீமாவோ பேரீச்சம்பழத் தேநீர்க் காலம்தான் இந்த நத்தார் எனக்கு என மனம் பதறியது.

சரி, பட்டி இழுப்பதற்கான கடிப்புவலை இல்லாவிட்டாலும் காரியமில்லை, பட்டியில் நிற்பதை முடிந்தளவு கையால் துரத்திப் பிடிக்கலாம் என்ற எண்ணத்தில் ஞானரெத்தினம் குஞ்சப்பு கொண்டுவந்த தோணியை வலித்துக்கொண்டு எங்களது பட்டியை சென்றடைந்தேன்.

ஆச்சரியம். பேராச்சரியம்.
என்றுமில்லாதவாறு களங்கண்டிப் பட்டி பூராவும் கணவாய், கருக்குவால்ப்பாரை, செலுவன், ஓரா, கலவாய் என பலவகை மீன்கள் பட்டியை நிறைத்து நின்றன.
எல்லாம் நிறென்ன பயன்...? அவற்றைப் பிடிப்பதற்கான கடிப்புவலை என்னிடம் இல்லையே....?! அழுகை ஒரு பக்கம், கோபம் இன்னொரு பக்கம்.....
அப்போதான் பெருங்குடாவுக்குள் நின்று தலையை தண்ணீருக்கு மேலே உயர்த்தி எட்டிப் பார்த்தது அந்தப் பேராமை. ஒரே பாய்ச்சல். ஆமையின் முன்னங்கைகள் இரண்டையும் பிடித்துப் புரட்டி.....
இப்போ பேராமை எங்களது சிறகுகட்டித் தோணிக்குள்.
என்னைவிடவும் வல்லமை பொருந்திய அந்தப் பபேராமையை நீருக்குள் வைத்து எப்படி மடக்கினேன்...., 20 பங்கு போட்ட அந்தப்பெரிய ஆமையை எப்படி மல்லாத்தினேன்....
நத்தார்ப்பொழுது பனிப்புகாரை விலத்தி எழுந்து வந்தது. இப்போ நினைத்தாலும் ஆச்சரியமாக இனிக்கிறது.
என்னதான் இந்த நாட்டில் வண்ண வண்ண லைற்றுகள் பூட்டிய நத்தார் மரத்துக்குக் கீழே, பரிசுப்பொட்டலங்களைக் குவித்துவைத்துப் பகிர்ந்து கொண்டாலும், சிவப்பு வைன், வெள்ளை வைன், விஸ்கி, கொண்ஞாக், செம்மறி வத்தல், பன்றி விலா என தின்று குடித்தாலும், அந்த 1979 நத்தார்தான் இதுவரை சிறப்பான இடத்தைப் பிடித்து நிற்கிறது என்பது சத்திய வார்த்தை.

# Ananda Raga Music institute




*2019* ஆண்டு செப்டெம்பர் மாதம் பூஜா சுரேஷ்குமார் தனது *15*ஆவது வயதில் பேர்கன் மாநகரில் ஆனந்த ராக மியூசிக் (Ananda Raga Music) என்ற பெயரில் ஒரு இசை கலைக்கூடத்தை ஆரம்பித்து, தான் கற்ற கலையை அடுத்த தலைமுறையினருக்கு கடத்துவதற்காக கர்நாடக சங்கீதம் மற்றும் பரதநாட்டியத்தை பிரதி சனிக்கிழமைகளில் Fana Kulturhus Nesttun மண்டபத்தில் கற்றுக்கொடுத்து வருகிறார். இவர் கர்நாடக சங்கீதம் மற்றும் வீணை வாசிப்பதில் சங்கீத கலாஜோதி, மற்றும் சங்கீத கலாரத்தினா பட்டங்களையும், பரதக்கலையில் நாட்டிய கலாஜோதி என்ற பட்டத்தையும் Oriental Fine Arts Academy of London (OFAAL) மூலம் பெற்றுள்ளார். பூஜா கர்நாடக சங்கீதத்தை தனது குருவான திருமதி நளாயினி சக்திமித்திரன் (வாசுகி ஆசிரியர்) அவர்களிடமும் பரதக்கலையை குரு தமயந்தி சாந்தகுமாரன் அவர்களிடமும் கற்றுள்ளார்.

செப்டம்பர் மாதம் *2023*இல் Bergen Kommune பன்னாட்டு கலாச்சார நிகழ்வுகளை பதிவுசெய்யும் விதமாக ஒவ்வொரு நாளும் ஒரு நாட்டின் கலைநிகழ்ச்சிகளை Fana Kulturhus> Nesttun மண்டபத்தில் நடாத்த திட்டமிட்டிருந்தனர். அந்த வகையில் தமிழ் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் பூஜா தனது ஆனந்த ராக மியூசிக் கலைக்கூடத்தின் மூலம் Autunm Raga Festival என்ற பெயருடன் ஒரு மணி கலைநிகழ்ச்சியை வழங்கினார். இந்த இசைநிகழ்ச்சியில் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம் மற்றும் வீணை மீட்டல் நிகழ்ச்சிகளை தனது மாணவர்களுடன் இணைந்து வழங்கினார். தன்னுடைய மாணவர்கள் மட்டும் அல்லாமல் பேர்கன் தமிழ் இசை கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், நிகழ்ச்சியை மேலும் மெருகூட்டும் வகையிலும் புல்லாங்குழல் வாசிப்பதற்க்காக கலாஜோதி ஆதிசன் லோகேஷ் மற்றும் மிருதங்க வித்துவான் செல்வன் ரமணன் முருகானந்தம் ஆகியோரையும் இணைத்துக்கொண்டு நிகழ்சிகளை சிறப்பித்தார்.

செப்டெம்பர் *29, 2023* அன்று நடைபெற்ற நிகழ்வை காண பலருக்கு சமூக ஊடகங்கள் மூலம் அழைப்பிதழ் அனுப்பப்பட்டு, கலையை இரசிக்கும் பலரும் வருகை தந்து இந்த Autunm Raga Festival நிகழ்ச்சியை மகிழ்ச்சியுடன் கண்டுகளித்தார்கள்.
செல்வி பூஜா சுரேஷ் அவர்களின் கலைப்பணி தொடர்ந்து சிறப்புற தேன் தமிழிதழ் வாழ்த்தி நிற்கின்றது

# மக்களின் வரிப்பணத்தில் மக்களுக்குக் கிடைப்பதென்னவோ டப்பா போக்குவரத்து... தலைவர்களுக்கோ அதி சொகுசு வாகனங்கள்.

Mohamed Ali Yaseer Arafath




இலங்கையில் இந்தியா தயாரிப்பு கார்களை விட ஜேர்மன் தயாரிப்பு கார்கள் ஏறத்தாழ பத்து மடங்கு விலை கூடியவை. இலங்கை அரசியல்வாதிகள் பாவிக்கும் சராசரி அதி சொகுசு வாகனங்கள் இருபது மடங்கு விலை மிக்கது. அது அவர்களுக்கு பிரச்சனை இல்லை. போனால் லீட்டருக்கு 2-3 கிலோமீட்டர் மைலேஜ் கொண்ட ஜேர்மன் ஜப்பான் அதிசொகுசு கார்களிலேயே அவர்கள் போவார்கள். ஆனால் மக்களுக்கு பொதுப் போக்குவரத்து வாகனங்கள் என்று வந்துவிட்டால் இந்திய தகரடப்பாக்களை அதுவும் தற்போது இந்திய தரமான வாகனங்களை உற்பத்தி செய்யும் நிலையில் கூட அவர்களிடம் இருந்து நல்லதை வாங்காமல் லொரி செஸ்ஸி பஸ்களையும் சோவியத் காலத்து Utilitarian மொடல் ரயில்களையுமே இலங்கை அரசியல் தலைவர்கள் இறக்குமதி செய்வார்கள்.

Alstom, Siemens, Renfe போன்ற தரமான ஐரோப்பிய ரயில்கள் இந்திய ரயில்களை பார்க்க 2-3 மூன்று மடங்கு விலைதான். சீனாவின் CSR, CRH, Sifang ரயில்களை கிட்டத்தட்ட அதே இந்திய விலைக்கு வாங்கி விடலாம்.

இலங்கையில் ஓடும் சீனாவின் Class S-12, S-14 மற்றும் இந்திய S-13 தயாரிப்புகளின் தரத்தில் பயணிகள் அனுபவத்தில் ஓட்டுநர் அனுபவத்தில் பாரிய வித்தியாசம் உள்ளது. முழு ஐரோப்பிய பொதுப் போக்குவரத்து துறையிலும் இன்று சீன பஸ்களே கோலோச்சுகின்றன. ஆனால் இந்த ஊழல் மொக்கச்சாமிகள் ரவீவ் மீட்டிங்கில் வைத்து சங்கிரீலா ஹில்டன் ஹோட்டல் மாலுபனிஸ் சாப்பிட்டு விட்டு லொறி செஸ்ஸி பஸ்கள் பாதுகாப்பு எதுவுமற்ற ரெக்ஸின் போர்த்திய திரீவீலர் தகரடப்பா utilitarian model இரயில்கள் என்று வரும் போது விலையை பார்த்து ஏக பே ஓக பே என்று நல்ல வாகனங்களை தட்டி கழித்து விட்டு இந்த Scrap Materials இறக்குமதி செய்வார்கள். ஆனால் டீலிங் மட்டும் ஸ்டான்டர்ட் சார்ட்டட், டொச் பேங்க் ஊடாக நடக்கும். அறிவார்ந்த தலைவர்களே....! பிரான்ஸின் Alstom நிறுவனம் NCRTC Delhi Urban Commuter Railway நிறுவனத்திற்காக குஜராத் அகமதாபாத் நகரில் உற்பத்தி செய்யும் ரயில்களின் படம்தான் மேலே உள்ளது. இனியாவது இந்தியன் கிரடிட் லைனில் குஜ்ஜுகளிடம் ஓடர் கொடுத்து இந்த மாதிரி நல்ல ரயில்களை எடுக்க முயற்சியுங்கள்.

# நோபேட் செபஸ்தியாம்பிள்ளை ஞாபகார்த்த கிண்ணம்




நோர்வே பேர்கன் நகரில் வாழும் தமிழ் இளைஞர்கள் சிலர் ஒன்று சேர்ந்து இயக்கி வரும் "Atletico" எனும் விளையாட்டு கழகம் கடந்த நவம்பர் மாதத்தில் நோபேட் செபஸ்தியாம்பிள்ளை ஞாபகார்த்த கிண்ண உதைப்பந்தாட்ட போட்டியினை நாடு தழுவிய ரீதியில் மிகவும் சிறப்பாக நடாத்தினார்கள்.

அமரர் நோபேட் செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் 1987ம் ஆண்டில் நோர்வே பேர்கன் நகருக்கு வந்து விளையாட்டு துறையில், குறிப்பாக உதைபந்தாட்டத்துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர். பேர்கன் தமிழர் விளையாட்டு கழகம், Bergen Vest விளையாட்டு கழகம், Åsane தமிழர் விளையாட்டு கழகம் என பல கழகங்களுக்காக விளையாடியதோடு, நிர்வாகப் பொறுப்புகளையும் ஏற்று அக்கழகங்களுக்காகவே உழைத்தவர்.

ஈழத்தில் உதைப்பந்தாட்ட துறையில் பல சாதனைகளைப் படைத்த பாசையூர் ஊரில் பிறந்த நோபட், நோர்வையிலும் துடிப்போடு விளையாடி மைதானத்தில் சிறந்த கோல்காப்பாளராக களம் ஆடியவர்.

அத்துடன் அவர் நின்று விடவில்லை. அவரது பார்வை இங்குள்ள தமிழ் சிறுவர்கள், இளையோர் பக்கமும் திரும்பியது. அவர்களது விளையாட்டுத் திறனை வளர்க்க வேண்டும் என்று எண்ணம் கொண்டு அதற்காய் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தார். வீடு வீடாய் சென்று தமிழ் சிறுவர்கள் இளைஞர்களை சேர்த்து, மைதான ஒழுங்குகள் செய்து,

அவர்களுக்கான உபகரணங்களைக் கொடுத்து, அவர்களுக்கு பயிற்சியளித்து, சிறந்த விளையாட்டு அணிகளை உருவாக்கினார். அவ்வாறு மிக உற்சாகமாக நோபேட் எமது பிள்ளைகளோடு பணியாற்றி அவர்களை தனது கரங்களுக்குள் அணைத்து வைத்திருந்தார்.

அன்றொரு நாள் இளைஞர்களுக்கான பயிற்சிகளை ஒழுங்கு செய்து கொண்டிருந்த வேளை ஒரு அணியில் வீரன் ஒருவர் குறைவாகவிருக்க நோபேட் இளையோருடன் மைதானத்தில் இறங்குகினார், உற்சாகமாக இளைஞர்களுக்கு இணையாக விளையாடிக் கொண்டிருந்த வேளை உயரப் பாய்ந்தவர், தனது தலை அடிபட விழுந்து சுயநினைவை இழந்தார். சில மாதங்கள் சுயநினைவற்ற மனிதனாய் பூமியில் வாழ்ந்தார். 2012ல் இறைபதம் அடைந்தார்.

நோர்வேயில் பல பாகங்களில் இருந்தும் மிகச்சிறந்த உதைப்பந்தாட்ட அணிகள் கலந்து சிறப்பித்தன. Bergen Tikitaca அணி வெற்றிக் கிண்ணத்தை தட்டிக் கொண்டனர். போட்டிகளின் நடுவில் அமரர் நோபேட் செபஸ்தியாம்பிள்ளை அவர்களுக்கு அஞ்சலி நிகழ்வுகள், அகவணக்கம், ஒளியேற்றலுடன் அமரர் தொடர்பான அஞ்சலியுரையினை யூலியஸ் அன்ரனி அவர்கள் வழங்கினார். அனைத்து விளையாட்டு வீரர்கள், குடும்பத்தினர், பொதுமக்கள் அனைவரும் மைதானத்தில் ஒன்று கூடி மரியாதை செலுத்தினர்.




யாருடைய அழுத்துங்களும் இல்லாது எமது இளையோர் தமது விளையாட்டு கழகத்துக்கும், விளையாட்டு துறைக்கு உதவி புரிந்த ஒருவரை நினைத்து, அவருக்கு நன்றி செலுத்தும் வகையிலும், அவரது அர்ப்பணிப்பான பணிகளை உலகிற்கு எடுத்துக் கூறும் வகையிலும், மிக சிறப்பான திட்டமிடலுடன் போட்டிகளை நடாத்தியமை, இங்கு வாழும் பெற்றோர், பெரியோர், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

நன்றி மறவாப் பண்பை கொண்ட இவ்வாறான இளைஞர்களை பாராட்டுவதோடு, இவர்களது விளையாட்டு கழகத்தின் விளையாட்டுத்திறன் மற்றும் செயற்பாடுகள் சிறப்புற வாழ்த்தி நிற்கின்றோம்.

உறவினர், நண்பர்கள் மட்டுமல்ல நோர்வே தமிழ் சமூகம் முழுவதும் ஏங்கியது. அவரது இழப்பு சமூகத்தில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியது. முதலாம், இரண்டாம் ஆண்டுகளை அமரரின் நண்பர்கள் இணைந்து அவரது ஞாபகார்த்தமாக உளளூரில் உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தினர். இவ்வாண்டு இங்குள்ள Atletico கழக இளைஞர்கள் தாமாகவே முன்வந்து நோர்வே நாடு தழுவிய ரீதியாக, போட்டிகளை நடத்தினார்கள். இது அமரர் நோபேட் அவர்களின் பத்தாம் ஆண்டு நினைவு போட்டியாகும்.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலின் பெரிது...(குறள் 103)



# இலங்கை 75: தேசியக்கொடியின் கட்டுக்கதைகள் - 2

-தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ.

இலங்கையின் தேசியக் கொடியை மையப்படுத்திய கட்டுக்கதைகள் ஏராளம். அதில் முதன்மையானது அதில் உள்ள சிங்கம் தொடர்பானது. இலங்கையின் முக்கியமான தேசிய சின்னங்களில் ஒன்றாக சிங்கத்திற்கு முக்கிய இடம் உண்டு. இலங்கையின் வரலாற்றுக் கதையாடலில் தவிர்க்கவியலாத இடத்தை அது பிடித்துள்ளது. இன்றும் சிங்கத்தில் இருந்து வந்தவர்கள் சிங்களவர்கள் என்று நம்புகிறவர்கள் இருக்கிறார்கள். அறிவியல் அறிவை உணர்ச்சிகர இயங்கியல் மேவிவிடுகின்ற சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று. இலங்கையின்இதேசியக் கொடியின் பிரதான அம்சமான சிங்கம் குறித்த பல கட்டுக்கதைகளை இங்கு நோக்கலாம். முதலாவது கட்டுக்கதை, இலங்கையின் முதல் மன்னனாகக் கருதப்படுகின்ற விஜயன் கையில் சிங்கக் கொடியுடன் இலங்கைக்கு வந்தான் என்பதாகும். அதனைத் தொடர்ந்து சிங்கம் முக்கிய சின்னமான வரலாற்றில் முக்கிய இடம் வகித்தது என்பதாகும். இதனால் விஜயனைத் தொடர்ந்து வந்த மன்னர்களால் சிங்கக் கொடி பயன்படுத்தப்பட்டது என்பதும் சிங்கள இனத்துக்குரிய அடையாளமாக சிங்கம் இருக்கிறது என்ற வாதமும் இன்றும் முன்வைக்கப்படுகிறது.

இங்கே மூன்று விடயங்களை நோக்க வேண்டும். முதலாவது, விஜயன் கையில் சிங்கக் கொடியுடன் வந்ததற்கான எந்தவொரு ஆதாரமும் இல்லை. அதற்கான சரியான வரலாற்றுக் குறிப்புகள் இல்லை. விஜயன் வந்தான் என்பதையே நிரூபிக்கவியலாமல் சிங்கள வரலாற்றாசிரியர்கள் தடுமாறும் போது அவன் கையில் சிங்கக் கொடியுடன் வந்தான் என்பதை எப்படி நம்புவது. இரண்டாவது, சிங்களம் இனம் என்ற கூற்றை நியாயப்படுத்த எந்த வரலாற்று ஆதாரமும் இல்லை. அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆட்சிக்காலத்து அரசர்கள் மற்றும் ராணிகள் யாரும் தங்களை சிங்களவர்கள் என்று கூறவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் கல்வெட்டுகளில் சத்திரிய இனம் மற்றும் இந்திய சூரிய மற்றும் சந்திர வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று தொடர்ந்து கூறி வருகின்றனர். இலங்கையின் பண்டைய மகாவம்ச சரித்திரமும் இலங்கையின் பண்டைய மன்னர்கள் மற்றும் ராணிகளை சிங்களர்கள்

என்று குறிப்பிடாமல், சூரிய மற்றும் சந்திர வம்சத்தைச் சேர்ந்த க்ஷத்திரியர்கள் என்றுமே குறிப்பிடுகிறது. அதன்படி அவர்களின் அரச சின்னங்கள் சூரியனும் சந்திரனும் ஆகும். இந்த பண்டைய மன்னர்களுக்கு சிங்கம் ஒரு அரச சின்னம் அல்ல, மேலும் அவர்கள் கட்டிடங்களின் நுழைவாயில்களை, கழிப்பறைக் கற்கள் மற்றும் சந்திரவட்டக்கற்களில் சிங்கத்தின் உருவத்தைப் பயன்படுத்தினர். சிங்கம் புனித தேசிய சின்னமாயின் அதில் தினமும் காலில் மிதிபடுகின்ற சந்திரவட்டக் கல்லிலோ, கழிப்பறைக் கல்லிலோ இடம்பெற்றிருக்க முடியாது.

சிங்கம் இலங்கையை ஆட்சிசெய்த, இந்தியாவில் பிறந்த கலிங்க மன்னர்களுக்கு மட்டுமே ஒரு முக்கிய அடையாளமாகத் தோன்றுகிறது. குறிப்பாக சிங்கபுரத்தில் (சிங்க நகரம்) இருந்து வந்ததாகக் கூறிய மன்னர் நிஸ்ஸங்கமல்லனும் (1187-1196) பிற கலிங்க மன்னர்கள் சிங்கத்தின் சின்னத்தை பரவலாகப் பயன்படுத்தினர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் அதன் பயன்பாட்டை பிரபலப்படுத்தினர். சிங்க உருவம் பண்டைய இலங்கையின் “அரச சின்னமோ, வம்ச சின்னமோ” அல்ல.

இரண்டாவது கட்டுக்கதை, துட்டகைமுனு மன்னன் எல்லாளனைத் தோற்கடிக்க படையெடுத்து வந்தபோது கைகளிலே சிங்கக் கொடிகளை ஏந்தியிருந்தான் என்பது. உண்மை யாதெனில், மகாவம்சத்தின் நாயகனாக துட்டகைமுனு இருந்தாலும் குறித்த மாபெரும் சரித்திர நிகழ்வு குறித்து விரிவாகப் பேசுகின்ற இந்நூலில் சிங்கக் கொடி பற்றியோ சிங்க இனம் பற்றியோ எதுவும் கூறவில்லை. இந்த கட்டுக்கதையை நம்புபவர்கள் பண்டைய தம்புள்ளை குகை கோவிலில் உள்ள ஒரு சுவரோவியத்தை குறிப்பிடுகிறார்கள். ஆனால் தம்புள்ளை கோவில் பழமையானது என்றாலும், குறிப்பிட்ட சுவரோவியம் சுமார் 200 ஆண்டுகள் மட்டுமே பழமையானது. அது ஆங்கிலேயர் காலத்தைச் சேர்ந்தது என்பதையும் அவர்கள் வசதியாக மறந்து விடுகிறார்கள்.

மூன்றாவது கட்டுக்கதை, கோட்டை இராச்சியத்தின் அரச கொடியாக சிங்கக் கொடி இருந்தது என்பது. ஆனால் குறித்த கூற்றை நிறுவுவதற்கான எந்தவொரு ஆதாரமும் இல்லை. இன்று சிங்கள வரலாற்றாசிரியர்களால் சவுக்குத் தாங்கிய சிங்கத்தின் போலிக் கொடி பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் கோட்டே இராச்சியத்தில் அத்தகைய கொடி இருந்ததற்கான வரலாற்று ஆதாரங்கள் எதுவும் இல்லை. மாறாக, கோட்டே இராச்சியத்தின் பெருஞ்சுவர் புலி முகங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது என்று, சந்தேச காவியம் உள்ளிட்ட அக்கால இலக்கியங்கள் கூறுகின்றன. கோட்டை நகரின் மீது மகரக் கொடிகள் வெற்றிக் கொடிகளாகப் பறந்தது என்றும் கருடக் கொடி கோட்டை இராச்சியத்தின் அரசக் கொடி என்று திசர சந்தேஷம் கூறுகிறது.

நான்காவது கட்டுக்கதை, இலங்கையின் கடைசி மன்னரான ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனின் அரச பதாகையாக சிங்கக் கொடி இருந்தது. ஆனால் உண்மை யாதெனில் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்க மன்னன் சிங்கக் கொடியை அரச சின்னமாகப் பயன்படுத்தியதாகக் கூறுவதற்கு வரலாற்றுச் சான்றுகள் எதுவும் இல்லை. அரசரின் அரச மானியங்களோ, அந்தக் காலத்து இலக்கியங்களோ சிங்கம் அல்லது சிங்கக் கொடியைப் பற்றிப் பேசவில்லை. அந்தக் காலத்தைச் சேர்ந்த ஐரோப்பியர்களின் கண்கண்ட சாட்சிகளின் பதிவுகளும் வாக்குமூலங்களும், ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனின் பதாகைகளில் சூரியன் சந்திரன் உட்பட விலங்குகளின்

உருவங்களுடன் கூடிய பல்வேறு கொடிகளும் பயன்படுத்தப்பட்டன என்றும் கூறுகின்றன. உண்மையில் விலங்குகளின் உருவங்கள் கொண்ட பல கொடிகள் (வாத்துகள், மயில்கள், மான்கள், கரடிகள், சிங்கங்கள், யானைகள், சிறுத்தைகள், கொக்குகள் மற்றும் பல பறவைகள்) கண்டி மற்றும் பிற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கண்டிய இராச்சியமானது அதன் தொடக்கத்தில் இருந்து கடுமையான போர்த்துகீசச் செல்வாக்கைக் கொண்டிருந்தது.

அதேவேளை பிரெஞ்சு உட்பட்ட பிற செல்வாக்குகளையும் கொண்டிருந்தது. உதாரணமாக, கண்டிய மன்னன் நரேந்திரசிங்கனின் முதலமைச்சரான தாஸ்கோன் ஒரு பிரெஞ்சுக்காரர். கண்டி இராச்சியத்தில் பயன்படுத்தப்பட்ட கொடிகளின் வடிவமைப்பிலும் ஐரோப்பிய செல்வாக்கு வெளிப்படையானது. இந்த விலங்குக் கொடிகள், வெறும் சடங்குகொடிகள். அவை ஒரு பரம்பரையின் பிரதிநிதிகள் அல்ல. அவை கண்டி இராச்சியத்தின் “அரச சின்னங்களும்” அல்ல.

கண்டி இராச்சியம் பற்றிய முக்கியமான குறிப்புகளை எழுதியவர் ரோபேட் பெர்சிவேல் என்ற அயர்லாந்து இராணுவ வீரர். 1797ம் ஆண்டு இலங்கைக்கு வந்து சில ஆண்டுகள் இலங்கை முழுவதும் பயணம் செய்த பெர்சிவேல் 1805ம் ஆண்டு “The Account of the Island of Ceylon” என்ற புத்தகத்தை வெளியிடுகிறார்.

18 அத்தியாயங்களை உள்ளடக்கிய 446 பக்கப் புத்தகம். இலங்கையின் பல்வேறு அம்சங்கள் குறித்த மிகவும் விரிவாக எழுதப்பட்ட மிகப் பழமையான அதேவேளை முன்னோடியான புத்தகம் அது. இதன் 11வது மற்றும் 12வது அத்தியாயங்கள் கண்டிய இராச்சியம் குறித்து விவரணமான குறிப்புகள் உண்டு. அதன்படி ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனின் முன் சுமந்து செல்லப்பட்ட கொடிகளில் சூரியன்ரூபவ் யானை, புலி உள்ளிட்ட பல்வேறு கொடிகள் கொண்டு செல்லப்பட்டன. மன்னரின் தனிப்பட்ட பதாகையாக இருந்ததாக இப்போது நம்பப்படும் சிங்கக் கொடி குறித்த எந்தவொரு குறிப்பையும் பெர்சிவேல் தனது குறிப்பில் எழுதவில்லை.

கண்டி இராச்சியம் குறித்த குறிப்புகளை எழுதிய யாரும் இது குறித்து எதுவித குறிப்புக்களையும் தரவில்லை. இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் சிங்கம் கண்டிய மன்னர்களின் பாரம்பரிய சின்னமாக இல்லாவிட்டாலும், சிங்கம் உண்மையில் ஒல்லாந்தர்களின் மிக முக்கியமான மரபுரிமைச் சின்னமாக இருந்தது. கண்டிய இராச்சியம் சுதந்திர அரசாக இருந்த காலத்தில் ஒல்லாந்தர்களே கடலோரப் பகுதிகளை ஆண்டனர். அவர்களின் செல்வாக்கு கண்டி இராச்சியத்துக்குள் வந்ததா? எவ்வாறு சிங்கக்கொடி பற்றிய

கருத்துருவாக்கம் தோற்றம் பெற்றது? இதனோடு தொடர்புடைய பிற கட்டுக்கதைகள் எவ்வாறு சிங்கக் கொடியைத் தேசியக் கொடியாக அங்கீகரிப்பதில் பங்கு வகித்தன என்பன முக்கியமான கேள்விகள். இவை குறித்து அடுத்த கட்டுரையில் பார்க்கலாம்.




வழமைக்கு மாறாக நிலா பருமனாகக் காட்சி தந்தது. ஆமாம் நூறு ஆடுகளைப் பட்டியோடு சேர்ர்த்து விழுங்கியதைப்போல கொழுத்துப் பருத்துக் காணப்பட்டது இத்தினத்தின் நிலா. கடலில் வலை விரித்ததுபோல் தனது ஒளியை பரந்துபட விசிறியடித்துக் கொண்டு எழுந்தது. ஒளிபட்ட கடற்பகுதியெல்லாம் வெள்ளிப் பாளங்களாய் மெல்ல அசைந்தன.

இளவரசி நேமி இன்னொரு நிலவாய் மின்னினாள். கிழக்குக் கடற்கரை மணற்பரப்பை விட்டு இளவரசி அவ்ரோடித் எழுந்தாள். தனது வலக்கரத்தை நீட்டி நானும் எழுந்துவிட ஒத்தாசை செய்தாள். இளவரசியின் வலக்கரத்தைப் பற்றி எழுந்தேன். கிழக்குக் கடற்கரையின் கரை நீளம் வடக்கு நோக்கி நடக்கத் தொடங்கினோம். காற்றற்ற வானத்தில் முகில்கள் முற்றாகத் துடைத்தெடுக்கப் பட்டிருந்தது. கடற்கரை மணலைப் போலவே வானத்திலும் நட்சத்திரங்கள் விதைந்து கிடந்தன. திடலில் குழந்தைகளை விளையாட விட்டு கண்காணித்துக் கொண்டு நிற்கும் ஒரு

அக்கறையுள்ள அப்பனைப்போல நிலவு நட்சத்திரங்களுக்கு மத்தியில் நின்றது.

“எதுவரை என்னோடு பயணிப்பாய் தங்கராசு?”
“உனது பயணவழி நெடுக இளவரசி நேமி”
“எனது பயணம் நீண்ட நெடியது”
“காரியமில்லை”
இளவரசி நேமி அவ்ரோடித் கூந்தலில் சூடியிருந்த மலர்ந்தும் மலராத இளஞ்சிவப்பு பிங்கீ மலர் இப்போ முழுதாய் மலர்ந்திருந்தது.

நட்சத்திரப் பட்டாளத்துக்கும், வெண்மணற் பட்டாளத்துக்கும் நடுவில் இருவரும் கரைநீளம் வடக்கு நோக்கி மிதந்து கொண்டிருந்தோம். எங்கள் இருவரையும் நிலவவும் தொடர்ந்து வழிநெடுக அவதானித்துக் கொண்டே வந்தது. எமது பயண-வழியில் இடையிடையே தூக்கம் கலைத்த கடலோரப் பறவைகளின் குரல்களையும் கடந்து கொண்டு நடந்தோம். காற்றற்ற வெளியில் கடலோரப் பறவைகளின் சின்னஞ்சிறிய கீச்சொலிகள்கூட எதிரொலித்து வியாபித்துக் கேட்டன. எங்களது நடைபாதையை விட்டு விலகி சற்றுத் தொலைவில் அவை சென்றமர்ந்து அவை தங்கள் தூக்கத்தைத் தொடரக்கூடும்.

“தரையில் விளையாடும் கடல் மீன்களைக் கண்டிருக்கிறாயா?” நேமி திடீரென்று கேட்டாள்.
“கரையேறிவிட்டால் மீன்கள் மரணித்துப்போமே இளவரசி?” என்றேன்.
“காண்பிக்கிறேன் அமைதியாக நடந்து வா” என்றாள்.
சிறிது தூரம் நடந்தபின் எனது கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினாள்.
“கால்களை ஆழப் பதிக்காமல் மெதுவாக நட, அதோபார் கரையில் திரிகிறார்கள்”
அவள் சுட்டிக்காட்டிய வடக்குத் திசையை உற்றுக் கவனித்தேன். மலையடிவாரத்தின் மேய்ச்சல் நிலத்தில் மந்தைகள் மேய்ந்ததுபோல் கூட்டம் கூட்டமாய் விளையாடிக் கொண்டிருந்தார்கள். எதுவுமே புலப்படாமல் குழப்பத்தோடே உன்னிப்பாக அவதானித்தேன். ஈரம் காயாத மீன்களை முழுநிலவொளி அடையாளம் காட்டியது. அதேவேளை மீன் கூட்டத்துக்கு நடுவே நான்கு கால்களில் துள்ளிக் குதித்துத் திரிபவை என்ன என்பது எனக்கு இனங்காணக் கூடியதாக இருக்கவில்லை.

இளவரசி நேமி என்னைப் பார்த்தாள். நான் குழப்பமாயிருப்பதை அவள் நிச்சயம் தெரிந்துகொண்டாள். சிரித்தபடியே எனது காதில் மெதுவாகச் சொன்னாள் “அயலிலுள்ள புதர்களுக்குள்ளும், சிறு பற்றைப் பொந்துகளிலும் வாழும் முயல்கள் அவை. இரவில், குறிப்பாக நிலாக் காலங்களில் தரையேறும் மீன்களும், இந்தக் முயல்களும் சுதந்திரமாக சேர்ந்து விளையாடுவார்கள். முத்தங்களை மாறி மாறிப் பகிர்ந்து கொள்வார்கள், இவர்கள் தமக்குள் பேசிக்கொள்ளவும், காதலைப் பகிர்ந்துகொள்ளவும் தமக்கென ஏதுவான மொழிகளை வகுத்துக் கொண்டிருக்கலாம்” என்றாள். கரையேறும் மீன்களும், காட்டு முயல்களும் காதல் காண்பதைப் பார்க்கவும், நேமி சொல்லும் கதைகளும் எனக்கு அதிசயத்தின்மேல்

அதிசயமாயிருந்தது. ஆமாம், மீன்களும் முயல்களும் தமக்குள் பேசிக்கொள்வது எனது செவிகளில் கேட்டது.

“அதிலும், எல்லாக் காலங்களை விடவும் இன்று இவர்கள் மிகுந்த குதூகலமாய் கொண்டாடி மகிழ்வார்கள்” என்றாள் நேமி.
“ஏனப்படி இளவரசி நேமி?”
“முதலில் நீ என்னை இளவரசி என்று அழைப்பதை நிறுத்து தங்கராசு”
“அப்படித்தானே அறிமுகஞ் செய்தாய் இளவரசி நேமி?”
“அறிமுகத்துக்குச் சொன்னவைகள் அனைத்தையும் பயணவழி நெடுகச் சொல்லவேண்டும் என்றில்லை தங்கராசு”
“சரி நேமி, இப்போ சொல் ஏன் இன்று இவர்கள் மிகுந்த குதூகலமாய் கொண்டாடி மகிழ்வார்கள் என்கிறாய்?”
“நிலவைக் கவனித்தாயா? மிகப் பிரம்மாண்டமாகவும், பிரகாசமாகவும் இருக்கிறதல்லவா?”
“ஆமாம், ஏன்? பார்ப்பதற்கு அச்சமாகக்கூட இருக்கிறது”
“இன்று தோன்றியுள்ள நிலவு வழமையாகத் தென்படும் நிலவின் அளவைவிட பதின்நாங்கு மடங்கு பெரியதும், முப்பது மடங்கு ஒளிவீச்சையும் கொண்டதாகும். பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரம் ஐம்பதாயிரம் கிலோமீற்றர்களாகக் குறைந்துள்ளது. 1948இல் இப்படி நிலவுக்கும் பூமிக்குமான நெருக்கம் ஏற்பட்டது. இதேபோன்ற நெருக்கம் இனி 2034 கார்த்திகை இறுதியில்தான் ஏற்படும்.”
சொல்லிக்கொண்டே நேமி தூரத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் மீன்களையும், முயல்களையும் அவதானித்துக் கொண்டேயிருந்தாள். இன்றைய பெருஞ்சந்திரனைப் பற்றி நேமி சொன்னவைகள் எனக்குப் புதிதாகவும், வியப்பாகவும் இருந்தன.

“சரி வா, அவர்களின் மகிழ்ச்சியை நாம் குழப்பக்கூடாது. நாம் சற்று உசக்க நடப்போம்” என்றாள் நேமி. கடற்கரையோரத்தை அண்டிய மேற்குப் புற்தரைக்கு ஏறி எமது பயணத்தைத் தொடர்ந்தோம். சிறிது தூரம் மேட்டு நிலத்தால் வடக்கு நோக்கி நடந்து, மீன்களும் முயல்களும் விளையாடும் அந்தப் பகுதி பின்நோக்கிக் கடந்ததும் மீண்டும் கரையோரத்துக்கு வந்தோம்.
வடக்குத்திசை நோக்கிய கடற்கரையோரப் பயணம் எந்தவித சலிப்புமற்று இதமாகவே இருந்தது எனக்கு. அதுவும் இளவரசி நேமி என்கிற தர்சியின் வலக்கரத்தைப் பற்றியபடி நடப்பது மெத்தவும் மகிழ்ச்சியாயிருந்தது.

இன்றைய தினத்தின் இறுதி நாலாங்கால்நாளை கரைநீளம் கால்களால் கடந்து விட்டோம்.
நிலவும் தனது இன்றைய பயணத்தில் உச்சிக்கு வந்துவிட்டது. மெல்ல மெல்லத் திரண்டும், கிழிந்தும் பனிப்புகார் கடலில் இறங்கத் தொடங்கியது. மெல்லிய காற்றும் வீசத் தொடங்கி மவுனித்திருந்த கடலைச் சீண்டி சிற்றலைகளின் தூக்கத்தைக் கலைத்து எழுப்பி விட்டது.

தொடர்ந்து நடந்தோம். தொடரும்......



# நத்தார் காலங்களில் அவதானம்:

தீயணைப்பு குழு சேவையின் ஆலோசனையைப் பின்பற்றவும் கிறிஸ்துமஸ் நாட்கள் என்றால் ஆலய வழிபாடுகளுக்கு அப்பால் நல்ல உணவு, மெழுகுவர்த்தி வெளிச்சம் மற்றும் குளிரை தங்க முடியாது peisஇனில் நெருப்பெரித்தல் என்பவை இங்கு வழமையானது. மெழுகுவர்த்திகளை கவனக்குறைவாகப் பயன்படுத்துதல் மற்றும் சமைக்கும் போது கவனக்குறைவு ஆகியவை தீ ஏற்படுவதற்கான பொதுவான காரணங்களாகும். இதனால் பாதிப்புக்கள் வருடாவருடம் இடம்பெறுகிறது.

தீயணைப்பு குழு சேவையின் ஆலோசனை குறிப்புகள்: வீட்டில் பொருத்தியுள்ள røykvarslerne (புகை கண்டறியும் கருவிகள்) செயல்படுகின்றனவா என்பதையும், slokkeutstyr தீயை அணைக்கும் கருவிகள் உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும். சமைக்கும் போது ஒருபோதும் அடுப்பை போட்டுவிட்டு சமையல் அறையை விட்டு வெளியே செல்லாதீர்கள்.
பற்றி எரியக்கூடிய கிறிஸ்துமஸ் அலங்காரங்கள், திரைச்சீலைகள், ஏனைய பொருட்களுக்கு அருகில் ஒருபோதும் ஒளிரும் மெழுகுவர்த்தியை வைக்க வேண்டாம். மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருக்கும் போது அவ்விடத்தை விட்டு வெளியேற வேண்டாம். பயன்பாட்டிற்கு முன் மின்சார கிறிஸ்துமஸ் விளக்குகள் ஒழுங்காக உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். பாதுகாப்பிற்காக, இரவு நேரங்களிலும், நீங்கள் வீட்டில் இல்லாத நேரங்களிலும் மின்சார Advent மெழுகுவர்த்திகள், கிறிஸ்துமஸ் நட்சத்திர விளக்குகள் ஏனைய கிறிஸ்துமஸ் விளக்குகளை இரவில் அல்லது நீங்கள் வீட்டில் இல்லாத போது அணைத்து விடவும். vaskemaskin, tørketrommel og oppvaskmaskin போன்றவற்றை தூங்கும் போதோ அல்லது வெளியில் செல்லும் போதோ பயன்படுத்த வேண்டாம்.

நீங்கள் படுக்கைக்குச் செல்வதற்கு முன் அல்லது வீட்டை விட்டு வெளியேறும் முன் வீட்டைச் சுற்றி ஒரு சோதனை செய்யுங்கள். அனைத்து மெழுகுவர்த்திகளும் அணைக்கப்படுவதையும், அடுப்பு மற்றும் பிற மின் சாதனங்கள் அணைக்கப்படுவதையும் உறுதிப்படுத்தவும்.

நீங்கள் விழித்திருக்கும் போது மற்றும் இருக்கும் போது lader கருவிகளை பயன்படுத்தவும். சரியான lader இனைப்பயன்படுத்தவும். இந்த ஆலோசனைகளை கடைப்பிடித்து ஆபத்துக்களை தவிர்ப்போம்.

Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440
(Print ISSN: 2703-8785)
VIPS: 729129 - Konto: 3626 31 78585